## ஈரோடு மாநகராட்சி

## 2025-2026-ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

### ஆட்சி எல்லை:

ஈரோடு நகராட்சி 1871ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண். 161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்: 28.11.2007இன்படி 01.01.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும், அரசாணை (நிலை) எண்.5, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்: 03.01.2011-இன் படி ஈரோடு மாநகராட்சியுடன் வீரப்பன் சத்திரம், பெரிய சேமூர், சூரம்பட்டி, காசிபாளையம் ஆகிய நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகள், பி.பெ.அக்ரஹாரம், சூரியம்பாளையம் ஆகிய இரண்டு பேரூராட்சிகள் மற்றும் திண்டல், கங்காபுரம், எல்லப்பாளையம், வில்லரசம்பட்டி, முத்தம்பாளையம் ஆகிய ஐந்து ஊராட்சிகள் என 11 உள்ளாட்சிகள் இணைக்கப்பட்டன. அரசாணை (நிலை) எண்.139, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 12.09.2011-இன் படி 60 வார்டுளாக பிரிக்கப்பட்டு 4 மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது. இம்மாநகரத்தின் மக்கள் தொகை, வெளியிடப்பட்ட 2011ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 4,98,469 ஆகும். தற்போதைய மக்கள் தொகை தோராயமாக 6,67,538 ஆகும். மற்றும் மாநகரத்தின் பரப்பளவு 109.52 சதுர கி.மீ. ஆகும்.

### ஆணையாளர்:

அறிக்கையாண்டில் திருமதி.கு.தனலட்சுமி, எம்.எஸ்.சி., எம்.பிஎல்., ஏபிஜிடியுஎம்., எம்.பி.ஏ., துணை ஆணையாளர் அவர்கள் ஆணையாளர்(பொ)ஆக 01.04.2025 முதல் 24.06.2025 வரையிலும், திரு. அர்பித் ஜெயின், இ.ஆ.ப., அவர்கள் 25.06.2025 முதல் 31.03.2026 வரையிலும் ஆணையாளராக பதவி வகித்து வந்தார்கள்.

திருமதி.கு.தனலட்சுமி, எம்.எஸ்.சி., எம்.பிஎல்., ஏபிஜிடியுஎம்., எம்.பி.ஏ., அவர்கள் 01.04.2025 முதல் 02.03.2026 வரையிலும், திருமதி.ர.சரஸ்வதி, பி.எஸ்சி., அவர்கள் 09.03.2026 முதல் 31.03.2026 வரையிலும் துணை ஆணையாளராக பதவி வகித்து வந்தார்கள்.

திரு. ஜெ. பிரேம்ஆனந்த், உதவி ஆணையர் அவர்கள் 01.04.2025 முதல் 18.09.2025 வரை மண்டலம்-2இன் உதவி ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

திருமதி. த.வ. சுபாஷினி, உதவி ஆணையர் அவர்கள் 18.09.2025 முதல் 31.03.2026 வரை மண்டலம்-2இன் உதவி ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

திருமதி. ஆர். லதா, உதவி ஆணையர் அவர்கள் 01.04.2025 முதல் 31.03.2026 வரை மண்டலம்-4இன் உதவி ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

திரு.மா. கார்த்திகேயன், நிருவாக அலுவலர் அவர்கள் 01.04.2025 முதல் 14.04.2025 வரை மண்டலம்-3இன் உதவி ஆணையாளர் (பொ)ஆக பணிபுரிந்துள்ளார்.

திரு. நா. அண்ணாதுரை அவர்கள் உதவி ஆணையர் (வருவாய்/பணியாளர்) 15.04.2025 முதல் 31.03.2026 வரை மண்டலம்-3இன் உதவி ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

திருமதி. இரா. சரோஜாதேவி, நிருவாக அலுவலர் அவர்கள் 01.04.2025 முதல் 02.11.2025 வரை மண்டலம்-1இன் உதவி ஆணையர் (பொ)ஆக பணிபுரிந்துள்ளார்.

திருமதி. ஆர். மோகனசுந்தரி, உதவி ஆணையர் அவர்கள் 03.11.2025 முதல் 31.03.2026 வரை மண்டலம்-1இன் உதவி ஆணையராக பணிபுரிந்துள்ளார்.

உதவி ஆணையர் (வருவாய்/பணியாளர்) பணியிடப்பொறுப்புகளில் உதவி ஆணையர் (பணியாளர்) ஆக திரு. நா. அண்ணாதுரை, உதவி ஆணையர் அவர்களும், உதவி ஆணையர் (வருவாய்) (பொ) ஆக திரு.மா. கார்த்திகேயன், நிருவாக அலுவலர் அவர்களும் பணிபுரிந்துள்ளார்கள்.

திருமதி. நா. சாய்லட்சுமி அவர்கள் உதவி ஆணையர் (கணக்குகள்)ஆக 01.04.2025 முதல் 27.06.2025 வரையிலும், திருமதி. செ. வசந்தி அவர்கள் 28.06.2025 முதல் 31.03.2026 வரை உதவி ஆணையர் (கணக்குகள்) (பொ)ஆக பணிபுரிந்துள்ளார்கள்.

திருமதி.செ.வசந்தி, அவர்கள் கணக்கு அலுவலராக 01.04.2025 முதல் 31.03.2026 முடிய பணிபுரிந்துள்ளார்.

திருமதி.இரா. சரோஜாதேவி அவர்கள் மண்டலம்-2 மற்றும் மண்டலம்-1இன் நிருவாக அலுவலராக 01.04.2025 முதல் 31.03.2026 முடிய பணிபுரிந்துள்ளார்.

திரு.மா. கார்த்திகேயன் அவர்கள் மண்டலம்-3 மற்றும் மண்டலம்-4இன் நிருவாக அலுவலராக 01.04.2025 முதல் 31.03.2026 முடிய பணிபுரிந்துள்ளார்.

திரு. த. விஜயகுமார் அவர்கள் மாநகர பொறியாளராக (கண்காணிப்பு பொறியாளர் நிலையில்) 01.04.2025 முதல் 22.04.2025 வரையிலும், திரு. கோ. முருகேசன் அவர்கள் 23.04.2025 முதல் 31.03.2026 வரையிலும் பதவி வகித்து வந்தார்கள்.

திரு. பெ. ஆனந்தன், உதவி செயற் பொறியாளர் அவர்கள் மண்டலம்-3 மற்றும் மண்டலம்-4இன் செயற் பொறியாளர் (பொ) ஆகவும், திரு. ம. பிச்சைமுத்து அவர்கள் மண்டலம்-1 மற்றும் மண்டலம்-2இன் செயற் பொறியாளர் (பொ) ஆகவும் 01.04.2025 முதல் 31.03.2026 வரை பணிபுரிந்துள்ளார்கள்.

திரு. எஸ். கோவிந்தராஜன், உதவி நகர திட்டமிடுநர் அவர்கள் 01.04.2025 முதல் 24.04.2025 வரையிலும், திரு. ஆ. செந்தில் பாஸ்கர், உதவி நகர திட்டமிடுநர் அவர்கள் 25.04.2025 முதல் 26.09.2025 வரையிலும், திரு. எஸ். கோவிந்தபிரபாகர், உதவி நகர திட்டமிடுநர் அவர்கள் 10.10.2025 முதல் 26.02.2026 வரையிலும் நகர திட்டமிடுநர் (பொ)

ஆகவும், திருமதி. பி. கலைவாணி அவர்கள் 13.03.2026 முதல் 31.03.2026 வரையிலும் நகர திட்டமிடுநராக பணிபுரிந்துள்ளார்கள்.

மரு. ம. கார்த்திகேயன் அவர்கள் 01.04.2025 முதல் 08.03.2026 வரையிலும், மரு.க. கௌரிசரவணன் அவர்கள் 09.03.2026 முதல் 31.03.2026 மாநகர நல அலுவலராகப் பணி புரிந்துள்ளார்கள்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் Notification No. 01/DMA/Recruitment/2024 dated: 02.02.2024 அறிவிப்பு மூலம் நேரடி பணி நியமனம் வழியாக 50 நபர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டதில், இம்மாநகராட்சியில் உதவி பொறியாளர்-10, உதவி பொறியாளர் (திட்டம்)-9, தொழில்நுட்ப உதவியாளர்-12 படவரைவாளர்-1, துப்புரவு ஆய்வாளர்-12 ஆக மொத்தம் 44 நபர்கள் பணியில் சேர்ந்து கொண்டனர். அதில் உதவி பொறியாளர் (திட்டம்)-1, உதவி பொறியாளர்-2 ஆக 3 நபர்கள் இம்மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு வேறு துறை பணிக்கு சென்றுவிட்டார்கள். தற்போது புதிதாக பணியமர்த்தப்பட்டவர்களில் 41 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

**கூட்டங்கள்.**

1. அறிக்கையாண்டில் சாதாரண கூட்டங்கள்-7, அவசரக் கூட்டங்கள்-2 மற்றும் சிறப்புக் கூட்டங்கள்-2 ஆக மொத்தம் 11 கூட்டங்கள் மாண்புமிகு மேயர் அவர்களால் நடத்தப்பட்டது.
2. அறிக்கையாண்டில் மொத்தம் 563 பொருள்கள் முடிவு செய்யப்பட்டது.
3. தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023இன் அத்தியாயம் IV பகுதி-1இன் விதிகளில் சொல்லப்பட்டுள்ளபடி மாமன்ற கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

**ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம்:**
-----------------------------------

அரசாணை (எம்.எஸ்.) எண். 4இன்படி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு UD2(2) துறை, தேதி.06.01.2020 நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குனரகத்தில் ஏற்கனவே உள்ள அலுவலகங்களை மறுசீரமைக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் நகர மற்றும் ஊரமைப்புத் துறையில் 15 புதிய மாவட்ட அலுவலகங்களை உருவாக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

தற்போது மாவட்டங்களில் இயங்கி வரும் பிராந்திய அலுவலகங்கள், உள்ளூர் திட்டமிடல் ஆணையங்கள் மற்றும் இயக்குனரகத்தின் புதிய வளர்ச்சி ஆணையங்கள் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட்டு அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட நகர மற்றும் ஊரமைப்பு அலுவலகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட நகர் மற்றும் ஊரமைப்பு அலுவலகத்தின் இணை இயக்குநர், துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அந்தந்த மாவட்ட அலுவலகங்களின் தலைவராகச் செயல்படுவதோடு, உள்ளூர் திட்டமிடல் ஆணையம் / புதிய நகர மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலாளராகவும் செயல்பட வேண்டும்.

ஒருங்கிணைந்த உள்ளூர் திட்டமிடல் ஆணையம் / புதிய நகரம் மற்றும் மேம்பாட்டு ஆணையம் - ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட உள்ளூர் திட்ட குழுமம்

- மாவட்ட ஆட்சியர் - தலைவர்
- இணை இயக்குநர்/துணை இயக்குநர் / நகர மற்றும் கிராம திட்டமிடல் உதவி இயக்குநர் - உறுப்பினர் செயலாளர்
- நிலத்தின் பயன்பாடு மற்றும் கட்டுப்பாடு அறிவியல் திட்டமிடல் மூலம் உறுதி செய்யப்படுகிறது
- முழு அளவில் செயல்படுத்தப்படும் மாஸ்டர் பிளான்கள் / புதிய நகர மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரித்தல்

## பொறியியல் பிரிவு

**பாலங்கள், சாலைகள், பரிசல்கள், மற்றும் கட்டிடங்கள் 2024-2025.**

**சாலைகள்:-**

மாநகராட்சி எல்லைக்குள் தேசிய நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகள் இல்லை. இம்மாநகராட்சி எல்லைக்குள் தமிழக அரசு நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகள் நீளம் 109.98 கிலோ மீட்டராகும். இம்மாநகராட்சியால் கீழ்க்கண்டபடி 841.79 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டது.

| | கி.மீ. |
|---|---|
| 1. சிமெண்ட் சாலை | 89.53 |
| 2. தார் சாலை | 691.55 |
| 3. கல் சாலை | 7.07 |
| 4. கப்பி சாலைகள் | 0.41 |
| 5. மண் சாலை | 53.23 |

**மொத்தம் : 841.79 கி.மீ.**

(ரூ.இலட்சத்தில்)

| வ.எண். | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மானியத் தொகை | பணிகள் விபரம் | | | செலவினத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | எடுக்கப்பட்டவை | முடிக்கப்பட்டவை | மீதமுயளள பணிகள் | |
| 1. | சாலைகள் 2025-26 | 4491.00 | 3180.00 | 52 | 52 | - | 2717.00 |
| 2. | 2025-26 ஆம் ஆண்டிற்கான செயல்பாடு, பராமரிப்பு | 1140.00 | 540.00 | 1 | | 1 | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மற்றும் பற்றாக்குறை மானியம் | | | | | | |
| 3. | தமிழ்நாடு காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறனுடைய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் | 352.00 | 352.00 | 1 | 0 | 1 | - |
| 4. | முதல்வர் படிப்பகம் | 320.00 | - | 1 | 0 | 1 | 47.65 |
| 5. | 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2024-25, 2025-26 (Un-Tied Grant) | 838 | 838 | 2 | - | 2 | 81.00 |
| 6. | 15வது மத்திய நிதிக்குழு மானியம்: 2021-22> 2023-24 (Tied Grant) | 40.40 | 40.40 | 2 | | 2 | 0.00 |
| 7. | 15வது மத்திய நிதிக்குழு மானியம்: 2024-25 (Tied Grant) | 638.74 | 638.74 | 17 | 12 | 5 | 344.61 |
| 8. | 15வது மத்திய நிதிக்குழு மானியம்: 2025-26 (Tied Grant) | 749 | 749.00 | 15 | 14 | 1 | 654.22 |
| 9. | 2025-26 ஆம் ஆண்டிற்கான மாநில நிதிக்குழு (SFC) - பள்ளி மேம்பாட்டு மானியம் (மூலதனப் பணிகள் | 164.00 | 164.00 | 5 | 4 | 1 | 91.05 |
| 10. | 2025-26 ஆம் ஆண்டிற்கான மாநில நிதிக்குழு (SFC) - பள்ளி மேம்பாட்டு மானியம் (மூலதனப் பணிகள் II | 208.00 | 208.00 | 6 | 5 | 1 | 108.33 |
| 11. | 2025-26 ஆம் ஆண்டிற்கான மாநில நிதிக்குழு (SFC) - பள்ளி மேம்பாட்டு மானியம் பராமரிப்புப் பணிகள் | 259.65 | 259.65 | 16 | 14 | 2 | 187.11 |
| 12. | 2025-26 ஆம் ஆண்டிற்கான மாநில | 209.00 | 209.00 | 14 | 12 | 2 | 103.78 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | நிதிக்குழு (SFC) – பள்ளி மேம்பாட்டு மானியம் பராமரிப்புப் பணிகள் II | | | | | | |
| 13. | 2025–26 ஆம் ஆண்டிற்கான மாநில நிதிக்குழு (SFC) – பள்ளி மேம்பாட்டு மானியம் பராமரிப்புப் பணிகள் II | 93.85 | 93.85 | 5 | | 5 | |
| 14. | நமக்கு நாமே திட்டம் 2025-26 | 386.91 | 386.91 | 19 | 12 | 7 | 172.38 |
| 15. | 15வது மத்திய நிதிக்குழு மானியம் k: 2024-25 > 2025-26 (Tied Grant) | 820.00 | 820.00 | 1 | | 1 | 318.00 |
| | **மொத்தம்** | **6219.55** | **5299.55** | **105** | **73** | **32** | **3194.13** |

**ஈரோடு சீர்மிகு நகரம் (Smart City)**

ஈரோடு மாநகரம் ஸ்மார்ட் சிட்டியாக நான்கவாது சுற்றில் தேர்வு செய்யப்பட்டு மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் கடிதம் எண். K/15016/157/2015-SC-1 நாள்.19.01.2018-நன வாயிலாக அறிவிக்கப்பட்டது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் 88 பணிகள் எடுக்கப்பட்டு 87 பணிகள் முடிக்கப்பட்டுவிட்டது மீதமுள்ள பணி பெரும்பள்ளம் ஓடை மேம்பாடு செய்யும் பணியில் 6 சிப்பங்களில் சுமார் ரூ.200.71 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 5 சிப்பம் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 1 சிப்பம் பணிகள் நடைபெற்று வருகிறது.

**தெருவிளக்கு.**
------------------

ஈரோடு மாநகராட்சியில் தற்போது 31046 LED தெருவிளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்கண்ட தெருவிளக்குகள் அனைத்தும் 2229 தானியங்கி சுவிட்சுகள் (Street light controller) மூலம் ON/OFF செய்யப்பட்டு வருகின்றன. மேலும் தெருவிளக்குகளின் எரிதல் விபரம் இணையதளம் வாயிலாக கண்காணிக்கப்பட்டு தெருவிளக்குகளின் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்யப்பட்டு வருகின்றன.

**குடிநீர் வழங்கல்**

நகரில் அறிக்கையாண்டுவரை 2898 பொதுக்குடிநீர் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் பகிர்மானக்குழாய்கள் இல்லாத பகுதிகளுக்கு மாநகராட்சி லாரிகள் மூலமாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதற்காக ஐந்து டிராக்டர்கள் பயன்படுத்தப்படுகிறது. நகரில் அறிக்கையாண்டுவரை 829 ஆழ்துளைக்கிணறு கைபம்புகளும் மற்றும் 958 சிறுமின்விசை பம்பு பொருத்தியும் இதர தண்ணீர் தேவைகளுக்காக பொதுமக்கள் உபயோகத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் குடிநீர் விநியோகத்தில் கூடுதல் குடிநீர் கட்டணம், குழாய் முறைக் கட்டணம் மற்றும் இதர இனங்கள் மூலம் ரூ.688.43 இலட்சம் மாநகராட்சிக்கு வருமானம் வரப்பெற்றுள்ளது.

**ஊராட்சி கோட்டையிலிருந்து ஈரோடு மாநகராட்சிக்கு தண்ணீர் கொண்டு வரும் தனிக்குடிநீர் திட்டம்**

மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் அமைப்பின் (CPHEEO) குறியீட்டின்படி ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கும் பொருட்டு ஊராட்சி கோட்டையிலிருந்து ஈரோடு மாநகராட்சி பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு வரும் தனிக்குடிநீர் திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.484.45 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பவானி நகரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள ஊராட்சிக்கோட்டைக்கு அருகில் வரதநல்லூர் காவிரி ஆற்றில் நீர் சேகரிப்பு கிணறு அமைத்து அதிலிருந்து இயல்பு நீர் எடுக்கப்பட்டு, 120 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட நீர் 52.00 லட்சம் கொள்ளளவு கொண்ட தரை மட்ட தொட்டியிலிருந்து 2180 கி.மீ. குழாய் மூலம் ஈர்ரடு மாநகராட்சிக்குட்பட்ட சூரியம்பாளையம் மற்றும் வ.உ.சி. பூங்கா ஆகிய இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள தரைமட்ட தொட்டிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

இவ்விரு தரைமட்டதொட்டிகளிலிருந்து 79.68 கி.மீ. கிளை நீருந்து குழாய் மூலம் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 21 மேல்நிலைத் தொட்டிகளுக்கும், நிலையிலுள்ள 46 பழைய மேல்நிலைத் தொட்டிகளுக்கும் கொண்டு செல்லப்படுகிறது. மேலும் 731.82 கி.மீ.. நீளமுள்ள பகிர்மானக் குழாய் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

**மரம் நடுதல், பூங்காக்கள்.**

----------------------------------

அறிக்கையாண்டில் வ.உ.சி.பூங்கா தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்தது. நகரில் வடபகுதியிலுள்ள சிதம்பரனார் பூங்கா சுமார் 28.94 ஏக்கர் பரப்பு கொண்டதாகும். பொதுமக்கள் வசதிக்காக தேகப்பயிற்சி நிலையம் மற்றும் குழந்தைகள் விளையாட்டு பூங்கா பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**அம்ரூத் மித்ரா பூங்கா பராமரிப்பு**

ஈரோடு மாநகராட்சியில் அம்ரூத் மித்ரா திட்டத்தின் கீழ் 15 பூங்காக்களில் ஒவ்வொரு பூங்காவிற்கு 4 மகளிர் சுய உதவிக்குழுக்கள் வீதம் ஆண்டுக்கு ரூ.93.60 இலட்சத்தில் பூங்காக்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**நகரமைப்புப் பிரிவு சார்ந்த கட்டணங்கள் வசூலிக்கப்பட்ட விபரம்.**

ஈரோடு மாநகராட்சிப் பகுதியில் புதியதாக கட்டப்படும் மற்றும் பழைய கட்டிடத்தினை இடித்து புதியதாக கட்டப்படும் 2500 சதுர அடி நிலப்பரப்பில் 3500 சதுர அடி வரையிலான தரைதளத்தில் 1 குடியிருப்பும் முதல் தளத்தில் 1 குடியிருப்பும் கூடிய குடியிருப்பு கட்டுமானங்களுக்கான கடடிட அனுமதி மனுதாரர்களிடம் இருந்து (onlineppa.tn.gov.in) இணையதளம் மூலம் விண்ணப்பித்து 2025-26ஆம் ஆண்டில் 692 விண்ணப்பங்கள் சுயசான்று அடிப்படையில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2500 சதுர அடி நிலப்பரப்பிற்கு கூடுதலாக உள்ளதும், 3500 சதுர அடிக்கு கூடுதலான குடியிருப்பு கட்டிட கட்டுமானங்கள் மற்றும் குடியிருப்பு அல்லாத வணிக பயன்பாட்டுடன் கூடிய 2000 சதுர அடிகள் வரையிலான கட்டிய பரப்பளவிற்கு கட்டிய அனுமதி (tnurbaneseva.tn.gov.in) இணையதளத்தின் மூலம் விண்ணப்பித்து 2025-26ஆம் ஆண்டில் நகரமைப்புப் பிரிவில் வசூல் செய்யப்பட்ட கட்டணங்கள்.

(ரூ. லட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | கட்டிட உரிமையாணைத் தொகை (Building License Fees) | 713.70 |
| 2. | பிற கட்டணங்கள் (சேவைக்கட்டணம், பாதாள சாக்கடை வைப்புத் தொகை, தொழிலாளர் நலநிதி, கொடி நாள் மற்றும் இதர) | 764.32 |
| | **மொத்தம்** | **1478.02** |

அனுமதி வழங்கப்படும் கட்டுமானங்கள் உத்தேச மதிப்பீட்டில் 1% தொகையினை இணையவழி மூலம் வசூலிக்கப்பட்டு மாநகராட்சியால் இயக்குநர், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், சென்னை அவர்களுக்கு வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் கொடி நாள் வசூல் தொகை உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நலநிதி வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

## பொது சுகாதாரம்

**பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவப் பணிகள்**

மக்கள் நலம் பேணும் பணியில் ஈரோடு மாநகராட்சி பொது சுகாதார பிரிவு செயல்பட்டு வருகிறது. பொது சுகாதார பிரிவின் மூலம் திடக்கழிவு மேலாண்மை, நோய் தடுப்பு பணிகள், கொசு ஒழிப்பு பணி, கொரொனா நோய் தொற்று தடுப்பு பணி, தாய் சேய் மற்றும் குடும்ப நலப் பணிகள் மற்றும் பிறப்பு இறப்பு பதிவு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திடக்கழிவு மேலாண்மை**

மாநகராட்சி பகுதிக்குள் இத்திட்டத்தை செயல்படுத்த ஏதுவாக பொது சுகாதார பிரிவு மொத்தம் 12 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பொது சுகாதார பணி கீழ்க்கண்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது.

| பதவி | மொத்தம் | அறிக்கையாண்டில் பணியில் இருந்தவர்கள் | காலிப் பணியிடம் |
|---|---|---|---|
| மாநகர நல அலுவலர் | 1 | 1 | - |
| சுகாதார அலுவலர் | 4 | 3 | 1 |
| துப்புரவு ஆய்வாளர்கள் | 13 | 8 | 5 |
| துப்புரவு மேற்பார்வையாளர்கள் | 24 | 3 | 21 |
| களப்பணி உதவியாளர்கள் | 3 | 0 | 3 |
| தூய்மை பணியாளர்கள் | 843 | 441 | 402 |
| ஓட்டுநர்கள் | 27 | 16 | 11 |

**தேசிய சுகாதார குழுமத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுடன் இணைந்து, மாநில அரசின் பின்வரும் சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன:**

- அனுமியா முத்து பாரத் திட்டத்தின் கீழ் இரும்புச் சத்து மாத்திரை வழங்கும் திட்டம்.
- வளரிளம் பெண்களுக்கு Sanitary Napkin வழங்கும் திட்டம்.
- நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெறும் பிரசவித்த தாய்மார்களுக்கு JSY திட்டத்தின் கீழ் ரூ.600/- வழங்கப்படுகிறது.
- பள்ளி சிறார்களுக்கான கண்ணொளி காப்போம் திட்டம்.
- வளரிளம் பருவத்திற்கான சுகாதாரத் திட்டம்.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்டம்.
- அனைத்து நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

**நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள்**
**மாநகரப் பகுதி**

12 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 24 X 7 மணிநேர மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது.

**நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்பட்டு வரும் சேவைகள்:**

1) புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் சேவை, பேறுகால முன் கவனிப்பு, பிரசவம் மற்றும் பேறுகால பின் கவனிப்பு, குடும்ப நல சேவைகள்
2) தொற்று நோய்களான வயிற்றுப்போக்கு, காய்ச்சல் மற்றும் இதர தொற்று நோய்களுக்கு சிகிச்சை அளித்தல்
3) சமுதாயம் சார்ந்த தாய்சேய் நல சேவை பணிகள்
4) தொற்று நோய்களை தடுத்தலும் கட்டுப்படுத்துதலும்
5) தொற்றா நோய்களான நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்களுக்கான பரிசோதனை மற்றும் தொடர் நடவடிக்கைகள்

6) பள்ளி நலக்கல்வி பணிகள் - பிறவிக்குறைபாடு, தாமத வளர்ச்சி, ஊட்டச்சத்து பற்றாக்குறை, மற்ற நோய்கள் போன்ற நான்கு வகையான நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளித்தல். இது குழந்தையின் தரமான நல்வாழ்விற்கும் நீண்ட ஆயுளுக்கும் பெரிதும் உதவி புரிகிறது.

7) பல்வேறு தேசிய நல்வாழ்வு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன:

1. பேறுசார் மற்றும் குழந்தை நல திட்டம்
2. அனைவருக்கும் தடுப்பூசித் திட்டம்
3. தேசிய குடும்ப நலத்திட்டம்
4. தேசிய இரத்தசோகை நோய் தடுப்புத் திட்டம்
5. தேசிய அயோடின் குறைபாடு தடுப்புத் திட்டம்
6. தேசிய பூச்சிகளால் பரவும் நோய்கள் கட்டுப்பாட்டு திட்டம்
7. தேசிய வயிற்றுப்போக்கு நோய்கள் கட்டுப்பாட்டு திட்டம்
8. தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டம்
9. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம்
10. ஒருங்கிணைந்த நோய்கள் கண்காணிப்பு திட்டம்
11. தேசிய வைட்டமின் "ஏ" பற்றாக்குறை நோய்க் கட்டுப்பாட்டு திட்டம்

8) முகாம்கள் மற்றும் களப்பணிகள்:

1. போலியோ சொட்டு மருந்து முகாம்கள்
2. மிஷன் இந்திரதனுஷ் தடுப்பூசி முகாம்கள்
3. வயிற்றுப்போக்கு கட்டுப்பாட்டு முகாம்கள்
4. தேசிய குடற்புழு நீக்கும் திட்ட முகாம்கள்
5. வைட்டமின் "ஏ" திட்ட முகாம்கள்
6. காய்ச்சலுக்கான சிகிச்சை முகாம்கள்
7. நலம் காக்கும் ஸ்டாலின்

**அனைவருக்கும் நல்வாழ்வு (Health and Wellness Center) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சுகாதார நல வாழ்வு சேவைகள்:**

12 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 21 நலவாழ்வு மையங்களாக செயல்பட்டு வருகின்றன.

நலவாழ்வு மையங்களில் 12 விதமான ஒருங்கிணைந்த சுகாதார சேவைகள் வழங்கப்படுகின்றன. அவைகள் நோய்த்தடுப்பு, சுகாதார மேம்பாடு, நோய் நீக்கம், மறுவாழ்வு மற்றும் நோய்தணிப்பு சேவைகளுக்கு தொடர்புடைய பேறுசார் மற்றும் மகப்பேறு பச்சிளங் குழந்தை, குழந்தை நலம் மற்றும் வளரிளம் பருவத்தினர் நலம் (RMNH+A), தொற்றுநோய் தடுப்பு, தொற்றாநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை, கண் மருத்துவம், சிறு நோய் சிகிச்சை மற்றும் அவசரகால முதலுதவி சிகிச்சை.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்:-**

ஏழை கர்ப்பிணித் தாய்மார்களின் ஆரோக்கியத்தையும் ஊட்டச்சத்து நிலையையும் மேம்படுத்துதல், கர்ப்ப காலத்தில் ஏற்படும் வருமான இழப்பை ஈடு செய்தல், குறைந்த

எடையுள்ள குழந்தைகள் பிறப்பதைத் தடுத்தல் போன்ற உயரிய நோக்கங்களுக்காக டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிதியுதவி 01.04.2018 முதல் 12,000 ரூபாயிலிருந்து ரூ.18,000/- ஆக ஏற்கனவே மாநில அரசால் உயர்த்தப்பட்டுள்ளது. கர்ப்பிணி பெண்களின் இரத்த சோகையைக் குறைத்திடவும், பச்சிளம் குழந்தையின் பிறப்பு எடை அதிகரிக்கவும் தேவையான இரும்புச்சத்து மருந்து மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய இரண்டு அம்மா தாய்சேய் நல பெட்டகங்கள் மூன்றாம் மற்றும் நான்காம் மாதத்தில் வழங்க இந்த நிதியுதவித் தொகையிலிருந்து ரூ.4,000/- பயன்படுத்தப்படுகிறது.

இந்த சிறப்பான திட்டத்தின் செயல்பாடுகளாவன:

| **நிதியாண்டு** | **செலவினம்** | **பயனாளிகள்** |
|---|---|---|
| 2025-26 | ரூ.25258000 | 3660 |

**மருத்துவப்பணிகள் மற்றும் மருத்துவ மையங்கள்:-**

மாநகராட்சிப் பகுதியில் 12 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

| **வ. எண்** | **பதவியின் பெயர்** | **தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை** | **தற்போது பணிபுரியும் நபர்களின் எண்ணிக்கை** | **காலிப் பணியிடங்கள்** |
|---|---|---|---|---|
| 1. | மருத்துவ அலுவலர் | 13 | 11 | 2 |
| 2. | செவிலியர்கள் | 48 | 32 | 16 |
| 3. | பகுதி சுகாதார செவிலியர் | 10 | 8 | 2 |
| 4. | நகர சுகாதார செவிலியர்கள் | 50 | 40 | 10 |
| 5. | மருந்தாளுநர் | 12 | 11 | 1 |
| 6. | ஆய்வக நுட்புனர் | 12 | 7 | 5 |
| 7. | மருத்துவமனை பணியாளர்கள் | 12 | 14 | 3 |
| 8. | மகப்பேறு உதவியாளர்கள் | 17 | 1 | 0 |

**தடுப்பூசி திட்ட அறிக்கை (2025 -26)**

| **Vaccine** | **Target** | **Acv** | **%** |
|---|---|---|---|
| **TD** | 4873 | 4909 | 99 |
| **Penta** | 4430 | 4483 | 121 |
| **OPV** | 4430 | 4485 | 121 |
| **BCG** | 4426 | 4406 | 100 |
| **MR1** | 4430 | 4479 | 121 |

**பிறப்பு மற்றும் இறப்பு பதிவு முறை:-**

பிறப்பு மற்றும் இறப்பு என்பவை ஒரு தனிமனிதனின் வாழ்வில் முக்கியமான இரண்டு நிகழ்வுகளாகும். இந்த நிகழ்வுகளைப் பதிவு செய்வது சட்டப்படி ஒரு தனிநபரின் அடையாள ஆதாரமாக விளங்குவதுடன், மக்கள் தொகை கணக்கெடுப்பதற்கான முக்கியமான அடிப்படை தகவல்களை அளிக்கிறது.

பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை, பிறப்பு இறப்பு பதிவுச்சட்டம், 1969-ன் படி, கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். மேற்கண்ட பதிவுச் சட்டம் தமிழ்நாடு பிறப்பு இறப்பு விதிகள், 2000-ன் படி மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, தமிழ்நாட்டின் முதன்மை பிறப்பு இறப்பு பதிவாளர் ஆவார். மாநிலம் முழுவதும் பிறப்பு இறப்பு பதிவுச் சட்டத்தை அமல்படுத்திடும் அதிகாரம், முதன்மை பிறப்பு இறப்பு பதிவாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிறப்பு மற்றும் இறப்புகளை அவை நிகழ்ந்த இடத்திலேயே 21 நாட்களுக்குள் பிறப்பு இறப்பு பதிவாளரிடம் பதிவு செய்வது கட்டாயமாகும். மேற்குறிப்பிட்ட 21 நாட்களுக்குப் பின், தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு விதி 2000ல் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி பிறப்பு இறப்பு பதிவுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் சம்பந்தப்பட்ட துறை பதிவாளர்களால் வெவ்வேறு மென்பொருள்களில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. பொது சுகாதாரத் துறையால் உருவாக்கப்பட்ட ஒரே சீரான CRS மென்பொருள் 01.01.2018 முதல் மாநிலம் முழுவதும் பயன்படுத்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகள் http://crs.tn.org இணையதளம் மூலம் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

ஈரோடு மாநகராட்சியில் செயல்படும் 12 மகப்பேறு இல்லங்களில் 2025-2026 - ம் ஆண்டில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி குழந்தைகள் பிறந்துள்ளன.

| ECMC - UPHC WISE DAILY DELIVERY STATUS 2025 -26 | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S. No | UPHC | 2025-26 | | | | | | | | | | | | |
| | | APR | MAY | JUN | JUL | AUG | SEP | OCT | NOV | DEC | JAN | Feb | Mar | TILL DATE 27-03-2025 |
| 1 | GANDHIJI ROAD | 2 | 1 | 1 | 3 | 1 | 1 | 1 | 0 | 1 | 2 | 1 | **5** | **19** |
| 2 | BP AGRAHARAM | 2 | 3 | 1 | 0 | 0 | 2 | 1 | 1 | 0 | 1 | 1 | **2** | **14** |
| 3 | PERIYASEMUR | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 3 | 0 | 0 | 0 | 0 | 3 | **8** |
| 4 | THINDAL | 2 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | **6** |
| 5 | AGATHIYAR STREET | 2 | 2 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** | **5** |
| 6 | NETHAJI ROAD | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** | **0** |
| 7 | SURIYAMPALAYAM | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| 8 | RAJAJIPURAM | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| 9 | SENGUNTHAPURAM | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| 10 | KARUNGALPALAYAM | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| 11 | SURAMPATTY | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **0** |
| | **TOTAL** | **8** | **7** | **3** | **4** | **2** | **5** | **5** | **1** | **1** | **3** | **3** | **10** | **52** |

**ஜனனி சுரக்ஷா யோஜனா: (JSY)**

2025-26 ல் 52 பிரசவித்த தாய்மார்கள் இத்திட்டத்தில் பயனடைந்தனர்.

**திடக்கழிவு மேலாண்மை**

ஈரோடு மாநகராட்சியில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 196 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரமாகிறது. அவ்வாறு சேகரமாகும் குப்பைகள் 60 பேட்டரிகளால் இயங்கும் வண்டிகள் மற்றும் 122 இலகுரக வணிக வண்டிகள் போன்ற மினி ஆட்டோக்கள் மூலம் வீடு வீடாக மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் பிரித்து வாங்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட 58 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை மாநகராட்சி பகுதியில் பொலிவு நகர திட்டத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள 24 நுண்ணுர கிடங்கிற்குக் கொண்டு செல்லப்படுகிறது. அங்கு மேற்கண்ட குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு, நாள்தோறும் சராசரியாக 10 மெட்ரிக் டன் உரங்கள் மாநகராட்சி உரக்கிடங்கில் தயாரிக்கப்படுகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் உரங்கள் சுமார் 1750 மெட்ரிக் டன் மாநகராட்சியில் நேரடியாக விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்கு அவர்களின் தேவைக்கேற்ப இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி குப்பைகள் உரமாக்கப்படுவதால் இம்மாநகராட்சி பகுதியில் குப்பை கழிவுகள் நல்ல முறையில் கையாளப்பட்டு அவை விவசாயிகளுக்கு உரமாக பயனளித்து வருகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் உயிர் உரங்கள் போக மீதமுள்ள மக்கும் குப்பைகளில் கோசாலை மூலமாக அகற்றப்படுகிறது.

மேலும், மக்காத குப்பைகளை கையாள 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இன்சினரேட்டர் இயந்திரங்கள் பொலிவு நகரத் திட்டத்தின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இன்சினரேட்டர் இயந்திரங்கள் பொலிவு நகரத் திட்டத்தின் மூலமாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தூய்மை இந்தியா தனி நபர் இல்ல கழிப்பிடம்**

**திறந்த வெளி கழிப்பிடம் மற்றும் குப்பையில்லாத நகரம்**

**(Open Defaecation Free Plus City, Garbage Free City)**

ஈரோடு மாநகராட்சி பகுதியில் கழிப்பிட வசதி இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு தூய்மை இந்தியா கழிப்பிட வசதி திட்டத்தின் கீழ் 5270 எண்ணிக்கையிலான தனி நபர் கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. ஈரோடு மாநகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை உரிய விதிகளின்படி தரம் பிரித்து, உரமாக்குதல் மற்றும் இறுதியாக்கம் வரையிலான பணிகள் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இரண்டாம்நிலை சேகரிப்பு முற்றிலும் தவிர்க்கப்பட்டு குடியிருப்பு பகுதிகளில் குப்பை தொட்டி இல்லாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளின் அடிப்படையில் ஈரோடு மாநகராட்சிக்கு திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத மாநகராட்சியாக (ODF+) அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஈரோடு மாநகராட்சியை குப்பை இல்லாத நகரமாக (Garbage Free City) அறிவித்து 3 நட்சத்திர அங்கீகாரம் பெறவும், திறந்தவெளி கழிப்பிடமற்ற மாநகராட்சியாக அறிவிக்கை

செய்யவும், மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சகம் விடுத்துள்ள நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, நடவடிக்கை மேற்கொண்டு அமைச்சகத்தின் அனுமதி வேண்டி நடவடிக்கையில் உள்ளது.

**ஈரோடு மாநகராட்சியில் NULM திட்டத்தின்கீழ் SUSV (Support to Urban Street Vendors) மற்றும் SUH (Shelter for Urban Homeless) ஆகிய இரு திட்டங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.**

**SUSV - (Support to Urban Street Vendors)**

**நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கான ஆதரவு**

SUSV நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரம் உயர மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 964 சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும், சாலையோர வியாபாரிகளுக்கான வியாபாரச் சான்றிதழ் (Vending Certificate) வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**SUH - (Shelter for Urban Homeless)**

**நகர்ப்புற வீடற்ற ஏழைகள் தங்குமிடம்**

ஈரோடு மாநகராட்சி NULM (National Urban Livelihood Mission) திட்டத்தின் கீழ் அட்சயம் அறக்கட்டளை வழியாக ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 10 வருடங்களாக சாலையோரங்களில் சுற்றித் திரியும் யாசகர்கள், ஆதரவற்றவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், வயதான முதியவர்கள் என 14000க்கும் மேற்பட்ட நபர்களை சந்தித்து அதில் 1450 நபர்களை மீட்டு மறுவாழ்வு வழங்கப்பட்டது.

ஈரோடு மாநகராட்சியின் கீழ் DAY NULM - (SUH) தங்குமிடங்களை, சோலார் லக்காபுரம், ஆர்.என்.புதூர் ஜவுளி நகர் மற்றும் வ.உ.சி பூங்கா வளாகம் மாநகராட்சியின் கீழ் சிறப்பாக நடத்தி வருகின்றது. தற்போது ஈரோடு சோலார் புதூர் அருகில் உள்ள நமது இல்லத்தில் 40 ஆதரவற்ற, வீடற்ற நபர்களும், ஆர்.என்.புதூர் ஜவுளி நகரில் செயல்படும் இல்லத்தில் 15 நபர்களும், வ.உ.சி பூங்கா வளாகத்தில் உள்ள இல்லத்தில் 15 நபர்களும் தங்கி பயன்பெற்று வருகின்றனர்.

**தாய் சேய் நலம் மற்றும் குடும்ப நலம்**

தடுப்பூசி திட்டத்தின் கீழ் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரண ஜன்னி தடுப்பூசி மற்றும் பிறந்த குழந்தைகளுக்கு ஓராண்டிற்குள் போலியோ சொட்டு மருந்து மற்றும் முத்தடுப்பூசி, காசநோய் தடுப்பூசி மற்றும் தட்டம்மை தடுப்பூசி போன்றவை குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட தவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

குடும்ப நல அறிக்கை 2022 -2023.

| வ.எண் | விபரம் | மொத்த சாதனை |
|---|---|---|
| 1. | அறுவை சிகிச்சை | 1619 |
| 2. | ஐ.யு.டி | 754 |
| 3. | சி.சி. | 21805 pices |
| 4. | ஓரல் மாத்திரைகள் | 1218 cycles |

**நகர்நல மையங்கள்**

**இந்திய மக்கள் தொகை திட்டம் (ஐ.பி.பி.5)**

1. இந்திய மக்கள் தொகை திட்டம் 5-ன் கீழ் 2 நகர்நல மையங்கள் திறக்கப்பட்டு அதற்கான பணியாளர்கள் நியமனம் செய்து பொதுமக்களுக்கு தகுந்த முறையில் உரிய காலத்தில் மருத்துவம் பார்க்கப்பட்டு களப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காந்திஜி ரோடு மகப்பேறில்லம் புதிய கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.
2. காந்திஜி ரோடு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் சராசரியாக மாதம் ஒன்றிற்கு 14 மகப்பேறுகள் நிகழ்கின்றன.

**கொசு ஒழிப்புத்திட்டம்**

ஈரோடு மாநகராட்சியில் கொசு ஒழிப்புப் பணி திட்டத்தின் கீழ் 436 பகுதி நேர DBC பணியாளர்கள் மற்றும் 130 முழுநேர DBC பணியாளர்கள் தனியாக ஒப்பந்தாரர் மூலம் தற்காலிகமாக நான்கு மண்டலங்களிலும் பணிபுரிந்து வருகின்றனர்.

ஈரோடு மாநகராட்சி பகுதியில் உள்ள 60 வார்டுகளையும் 6 பகுதிகளாக (Six Day Block) பிரிக்கப்பட்ட நோய் தடுப்பு நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு எடுக்கப்பட்டு வருகிறது.

**I. முற்பகல்-கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கைகள்**

1. தினமும் ஒரு பகுதியாக வாரத்தில் மாநகராட்சி முழுவதும் நீர்த்தொட்டிகள், மேல்நிலைத் தொட்டிகள், கிணறுகள், இதர நன்னீர் தேக்கங்களில் தேவைப்படும் இடங்களில் டெமிபாஸ் என்ற கொசுப்புழுக்கொல்லி மருந்து ஊற்றப்பட்டு வருகிறது.
2. சாக்கடைகள் மற்றும் கழிவுநீர் தேக்கங்களில் பயோலார்விசைடு கொசுப்புழுக்கொல்லி மருந்து தெளிக்கப்படுகிறது.

**II. பிற்பகல்-முதிர் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள்**

1. வளர்ந்த கொசுக்ககள் அழிக்கும் பணிக்காக தினமும் Portable fogging machine and vehicle mounted fogging machine கொண்டு பைரீத்ரம், 2% மாலத்தியான் 95% ஆகிய மருந்து கலவைகள் மூலம் கொசுப்புகை மருந்து அடிக்கும் பணி செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்டவாறு கொசுக்கள் அழிக்கும் பணி போர்க்கால அடிப்படையில் ஈரோடு மாநகராட்சியில் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் சிக்குன் குனியா, டெங்கு, மலேரியா போன்ற காய்ச்சல் பரவாமல் தடுக்கப்பட்டு வருகிறது.

12 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், காய்ச்சல் என வரும் நபர்களிடம் இரத்த தடவல் சேகரித்து நோயின் தாக்கம் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்படுகிறது. இதன் மூலம் தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டு நோய் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும், நோய் அறிகுறி கண்ட இடங்களில் கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## பொது நலம்

### 1.பொதுக் கழிப்பிடம்

அறிக்கையாண்டில் இம்மாநகராட்சியில் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் இலவச கழிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| S.No. | Zone | Community & Public | ISP | Vambay | Pay and Use | Total |
|---|---|---|---|---|---|---|
| 1. | I | 53+4 = 57 | 0 | 0 | 5 | 62 |
| 2. | II | 25+14=39 | 0 | 0 | 0 | 39 |
| 3. | III | 51+14=65 | 0 | 0 | 5 | 70 |
| 4. | IV | 39+2 =41 | 0 | 0 | 10 | 51 |
| | **TOTAL** | **202** | 0 | 0 | **20** | **222** |

### 2.தூய்மை பணியாளர்களின் நலம்

தூய்மைப் பணியாளர்களுக்கென இம்மாநகராட்சி 143 வீடுகள் கட்டிக்கொடுத்துள்ளது. அவர்களது குழந்தைகளின் நலனைக் கருதி அவர்கள் குடியிருப்பு அருகில் ஒரு துவக்கப்பள்ளியை நடத்தி வருகிறது. இப்பகுதியில் கல்வி பயிலும் தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு இலவசமாக பகல் உணவு பள்ளிநாட்களில் வழங்கப்பட்டு வருகிறது. ஆண் தூய்மைப் பணியாளர்களுக்கு தலா 2 அரைக்கால் சட்டை 2 அரைக்கை சட்டை தைப்பதற்கு பாலியெஸ்டரில் காக்கித்துணி தலா 5.10 மீட்டரும், அதற்குரிய தையல் கூலியாக செட் 1க்கு ரூ. 200-ம் 2 மீட்டர் தலைப்பாகைத் துணியும், பெண் தூய்மைப் பணியாளர்களுக்கு தலா 2 புடவைகளும் 2 ஜாக்கெட்டுகளும் வழங்கப்பட்டது. அனைத்து தூய்மைப் பணியாளர்களுக்கும் அறிக்கையாண்டில் காலணி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டது. அனைத்து தூய்மைப் பணியாளர்களுக்கும் இருமுறை இலவச மருத்துவ முகாம் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் திறன் மேம்பாட்டு பயிற்சியும், யோகா பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

### 3. தொழில் உரிமக் கட்டணம் (Trade License)

கீழே குறிப்பிட்டுள்ள தொழில்களைத் தவிர, இதர தொழில்கள் செய்வதற்கு உரிமையாணை பெறுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

1. நாட்டுச் செக்கால் எண்ணெய் தயாரித்தல்
2. மண்பாண்டம் செய்தல்

ஈரோடு மாநகராட்சிகளின் சட்டம் 377 பிரிவின்படி, மாநகராட்சி எல்லைக்குள் பால்பண்ணை வைத்தவர்களுக்கும் பால் விற்பனை செய்பவர்களுக்கும் உரிமையாணை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க தொழில்கள் மாநகராட்சி துப்புரவு ஆய்வாளர்களால் காலமுறைப்படி பார்வையிடப்பட்டது.

உரிமையாணை பெறாமல் தொழில் செய்பவர்கள் மற்றும் உரிமையாணை நிபந்தனைகளை மீறி தொழில் நடத்துபவர்களின் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. உரிமையாணைக் கட்டணங்கள் மூலம் 2025 - 2026 ஆம் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ.16757814/-ஆகும்.

## திட்டப்பிரிவு

01-09-93-ந் தேதிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை எம்.எஸ்.எண்.759-ன்படி ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம் திருத்தியமைக்கப்பட்டு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை உள்ளூர் திட்டக்குழும தலைவராகவும், நகரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களை உறுப்பினர் செயலாளராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. 13-10-2020-ந் தேதிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை (எம்.எஸ்) எண்.154-ன்படி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கட்டிடங்களில் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 10000 சதுரஅடி தரை பரப்பு வரையிலும், வணிகக் கட்டிடங்களுக்கு 2000 சதுர அடி தரைபரப்பு வரையிலும் திட்ட அனுமதி வழங்க ஈரோடு மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 2. விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்

ஈரோடு நகரில் 5 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு இதில் விரிவு அபிவிருத்தித் திட்ட எண்-3 அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் 1,2,3 மற்றும் 5 ஆகியவைகளுக்குப் புதிய நில அளவைப் பதிவேடுகளின்படி, வரைபடங்கள் தயார் செய்து 1971-ம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டப்பிரிவு 19ன்கீழ் பிரசுரம் செய்ய உறுப்பினர் செயலர் ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களால் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உள்ளூர் திட்டக்குழுமப் பகுதிகளில் நடைபெற்று வரும் கட்டிட அபிவிருத்திகள் முழுமைத் திட்ட நில உபயோகத்தினைச் சார்ந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 2024-2025 ஆண்டு கட்டிட விண்ணப்பங்கள் பற்றிய அறிக்கை

| | | |
|---|---|---|
| ஆண்டு ஆரம்பத்தில் நிலுவை | - | 25 |
| வரப்பெற்ற விண்ணப்பங்கள் | - | 451 |
| மொத்த மனுக்கள் | - | 276 |
| அனுமதி வழங்கப்பட்டவை | - | 298 |
| அனுமதி மறுக்கப்பட்டவை | - | 147 |
| திருப்பப்பட்டவை | - | 0 |
| நிலுவை | - | 31 |

## 2024-2025 ஆண்டு மேல்முறையீட்டு மனுக்கள் பற்றிய விபரம்

| | | |
|---|---|---|
| மேல் முறையீட்டு மனுக்கள் பெறப்பட்டவை | - | இல்லை |
| மேல் முறையீட்டு மனுக்கள் முடிவு செய்யப்பட்டவை | - | இல்லை |
| நிலுவை | - | இல்லை |

## 2024-2025 ஆண்டு வரை ஆக்கிரமிப்புகள்

| | | |
|---|---|---|
| ஆண்டு ஆரம்பத்தில் நிலுவை | | 13 |
| நடப்பு ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டவை | | 37 |
| மொத்தம் | | 50 |
| அறிக்கையாண்டில் அப்புறப்படுத்தப்பட்ட தற்காலிக ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை | | 37 |
| அறிக்கையாண்டில் இறுதியில் நிலுவையாக உள்ள ஆக்கிரமிப்புகள் ( தற்காலிக ஆக்கிரமிப்புகள்) | | 13 |
| வருவாய்த்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையினரிடம் நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டவை மன்ற ஒப்புதல் பெற வேண்டியது | - | இல்லை |
| தொழில் நிறுவனம் | - | இல்லை |
| அனுமதியற்ற இயந்திர நிறுவனங்கள் | - | இல்லை |
| தண்டிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது | - | இல்லை |
| இயந்திர நிறுவனங்களுக்கு அனுமதி வேண்டி பெறப்பட்ட மனுக்கள் | - | இல்லை |
| அனுமதி அளிக்கப்பட்டது | - | இல்லை |
| அனுமதி அளிக்கப்படாமல் திருப்பப்பட்டது | - | இல்லை |

## 3. தொழிற்சாலைகளும், தொழில்களும்

இந்நகரில் பல அரிசி ஆலைகள் ஒரு நூற்பு நெசவு ஆலை, எண்ணெய் எடுத்தல், சலவை செய்தல், மோட்டார் உந்துகள் பழுது பார்த்தல் மற்றும் சிறுதொழில்கள் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. சென்னிமலை சாலையில் அரசினர் தொழிற்பேட்டை உள்ளது. இங்கு சிறிய அளவில் பல தொழில்கள் நடைபெறுகின்றன.

கைத்தறி நெசவுத் தொழிலில் இந்நகரம் இந்தியாவிலேயே முக்கிய இடம் வகிக்கிறது. கடலை எண்ணெய் மற்றும் மஞ்சள் ஏற்றுமதியின் இந்நகரம் முதலிடம் வகிக்கிறது. மேலும் இந்நகரிலிருந்து தினமும் கணிசமான அளவு பால், சென்னை, பெங்களுர் முதலிய நகரங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

# வருவாய் பிரிவு

# வருவாய் பெருக்கும் முயற்சிகள்

## பொது

இத்தலைப்பின் கீழ் நிதி நிலைமையை அபிவிருத்தி செய்ய மாமன்றம் பல முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

## பேருந்து போக்குவரத்து

இம்மாநகராட்சி எவ்வித பேருந்து போக்குவரத்தும் நடத்தவில்லை. தனியார் கம்பெனிகளும் தமிழ்நாடு அரசைச் சார்ந்த போக்குவரத்துக் கழகங்களாலும் நடத்தப்படும் நகரப் பேருந்து போக்குவரத்தால் பயனடைந்து வருகிறது.

## மாநகராட்சி குத்தகை இனங்கள்

இம்மாநகராட்சிக்கு சந்தைகள், பேருந்து நிலைய கட்டணங்கள், வணிக வளாகங்கள், மிதிவண்டி நிலையங்கள் மற்றும் கட்டண கழிப்பிடங்கள் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் பற்றி விவரங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | ஏல இனம் | 2025-2026-ம் ஆண்டு உரிமத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | சேர்மன் ஆர்.கே.வெங்கடசாமி சாலையில் நேதாஜி தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (அதன் பின்புறம் ஆர்.கே.வி.சாலையில் புதியதாகக் கட்டப் பட்டுள்ள மாநகராட்சி வணிக மையக் கட்டிடம் செல்லார், தரைத்தளம் முதல் மூன்றாம் தளம் முடிய மற்றும் இந்த கட்டிடத்தை சுற்றியுள்ள மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்டுள்ள காலியிடமும் மற்றும் ஆர்.கே.வி.சாலையில் முதல் மாடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் நீங்கலாக.) | 27028000- |
| 2. | நேதாஜி சாலையில் உள்ள ஹெமிங்வே வாரச்சந்தை, தங்கபெருமாள் வீதி மற்றும் நீல்கிரீஸ் சந்து பகுதியில் வாரச்சந்தை மற்றும் பெரியார் நகரில் உள்ள | 487500- |

| | | |
|---|---|---|
| | வாரச்சந்தைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | |
| 3. | ஈரோடு மாநகராட்சி மண்டலம்-II மாணிக்கம்பாளையம் அருகில் நடைபெறும் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 241500- |
| 4. | மண்டலம்-II பெரிய சேமூர் வார்டு எண்.17 கனி ராவுத்தர் குளம் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 70000- |
| 5. | பேருந்து நிலையத்திற்குள் வடபுறம் விசிடிவி சாலை பக்கவாட்டில் அமைந்துள்ள ஆட்டோ ஸ்டேண்டில் ஆட்டோக்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 90300- |
| 6. | காந்திஜி வீதியில் உள்ள மாநகராட்சி டாக்சி ஸ்டேண்டில், கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 94000- |
| 7. | பேருந்து நிலையத்தில் ஒருங்கிணைந்த சுகாதார கட்டணம் கழிப்பிடம் குத்தகை உரிமம் | 1956675- |
| 8. | மினி பேருந்து நிலைய கீழ்தளத்தில் செல்லார் பகுதி சைக்கிள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1581000- |
| 9. | பேருந்து நிலைய செல்லார் பகுதி சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்தும் இடத்தில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1638000- |
| 10. | நேதாஜி ரோடு வணிக வளாகம் செல்லார் பகுதி சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்தும் இடத்தில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 930000- |
| 11. | ஜீவானந்தம் சாலையில் ஆடு வதைக் கூடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1119038- |
| 12. | பூந்துறை ரோடு கட்டணக் கழிப்பிடம் (கால்நடை மருத்துவமனை எதிரில்) கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 101850- |
| 13. | பிரப்ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 199500- |
| 14. | சம்பத் நகர் வணிக வளாக கடைகளுக்கு பின்புறம் உள்ள காலியிடத்தில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூக்கும் உரிமம் | 262500- |
| 15. | வ.உ.சி. பூங்கா அருகில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 228000- |
| 16. | மூலப்பட்டறை சந்திப்பில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 36225- |
| 17. | சூரம்பட்டி -2 நெம்பர் பஸ் நிறுத்தம் அருகில் உள்ள கட்டணக் கழிப்பிடம் | 78500- |
| 18. | கருங்கல்பாளையம் தங்கப்பெருமாள் பூங்கா கட்டண கழிப்பிடம் | 52500- |
| 19 | பன்னீர் செல்வம் பார்க் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 141750- |
| 22 | காந்திஜி ரோடு காளைமாட்டு சிலை வணிக வளாகம் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1081500/- |

| | | |
|---|---|---|
| 23 | கனிமார்க்கெட் வணிக வளாகம் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1650000/- |
| | **மொத்தம்** | **3,90,68,338-** |

**தனியார் வாரச் சந்தை**

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட தனியார் வாரச் சந்தைகள் மொத்தம் 8 சந்தைகள் உள்ளன. அதில் 2025-2026 ஆம் ஆண்டிற்கு வருவாயாக ரூ.21,05,199/- வரப்பெற்றது.

**அறிவியல் தொழில் நுட்ப பூங்கா**

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் எண் 3-ல் பகுதியில் அறிவியல் தொழில் நுட்ப பூங்கா நிறுவப்பட்டு திருவாளர் ஆன்கிடின் என்பவருக்கு மன்ற தீர்மான எண். 664 நாள். 27.11.2024 ன்படி, உரிமம் வழங்கப்பட்டது. இதன் மூலம் 2025-2026 ஆண்டிற்கு 25% பங்கு தொகை ரூ. 2,36,367/- வருவாய் வரப்பெற்றுள்ளது.

## வணிக வளாகங்கள்

(i) இம்மாநகராட்சி எல்லக்கட்பட்ட கனிமார்க்கெட் வணிக வளாக மொத்த கடைகள் 429 ஆகும்.

(ii) கனிமார்க்கெட் திறந்தவெளிக் கடைகள் 80 ஆகும்.

(iii) கனிமார்க்கெட் வணிக வளாகத்தில் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ.1405.70 இலட்சம் ஆகும்.

(iv) இதர காலியாக உள்ள கடைகளுக்கு பயன்பாட்டிற்கு கொண்டு வர தொடர்ச்சியாக பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்படுகிறது.

## பேருந்து நிலையம்

ஈரோடு மாநகராட்சி சுதந்திர தின வெள்ளி விழா பேருந்து நிலையம் 11.2 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இம்மாநகராட்சி பேருந்து நிலையம் 2002-2003 முதல் “A” கிரேடு பேருந்து நிலையமாக செயல்பட்டு வருவதுடன் நாள் ஒன்றுக்கு சுமார் 511 பேருந்துகள் வந்து செல்கின்றன.

மேலும் பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்தல் ஏலம் மூலம் ஒப்படை செய்யப்பட்டு தொடர்ந்து இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்மூலம் ஆண்டிற்கு ரூ.29.16 இலட்சம் வருவாய் கிடைக்கிறது.

இப்பேருந்து நிலையத்தில் பழைய வணிக வளாகம், புதிய வணிக வளாகம் மற்றும் மேற்குப்புற வணிக வளாகங்களில் சுமார் 130 கடைகளும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு இடங்களில் உள்ள வணிக

வளாகங்களில் சுமார் 288 எண்ணிக்கை கடைகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இவற்றில் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ.866.88 இலட்சம் ஆகும்.

மேலும் பேருந்து நிலையத்தில் பயணிகளின் வசதிக்காக ஒருங்கிணைந்த சுகாதார வளாக கழிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன்மூலம் ஆண்டிற்கு ரூ.18.63 இலட்சம் வருவாய் கிடைக்கிறது.

மேலும் பேருந்து நிலையம் விஸ்தரிப்பு செய்து புதியதாக சிற்றுந்து நிலையம் அமைக்கப்பட்டு அவற்றின் தரைத்தளத்தில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமும், புதிய வணிக வளாக தரைத்தளத்தில் ஒரு இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமும், ஒரு ஆட்டோ நிறுத்துமிடம் ஆகியவை பராமரிக்கப்பட்டு ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

பேருந்து நிலையத்தில் தொலைதூர பயணிகள் தாங்கள் முன் பதிவு செய்த பேருந்துகள் வரும் வரை காத்திருக்க மாநகராட்சியால் குளிர் சாதன அறை ஒன்று புதிதாக கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்றுள்ளது. இதற்காக கட்டணம் ஏதும் வசூலிக்காமல் இலவசமாக அனுமதிக்கப்படுகிறது.

## ஆடு வதை செய்யுமிடம்

அறிக்கையாண்டில் ஆடுவதை செய்வதற்கான இடம் ஜீவானந்தம் சாலையில் இயங்கி வருகிறது. ஆடுவதை செய்யுமிடத்தின் மூலம் கிடைத்த வருமானம் ரூ.11.19 இலட்சம் ஆகும்.

## கட்டண கழிப்பிடங்கள்

மாநகராட்சியில் பேருந்து நிலையம் மற்றும் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 9 கட்டண கழிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் மாநகராட்சிக்கு ஆண்டிற்கு ரூ.26.37 இலட்சம் வருவாய் கிடைக்கப்பெற்று வருகிறது.

## தொழில்வரி

தமிழ்நாடு அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண். 11, நாள். 12.01.1999–ல் 1992 ஆம் ஆண்டு தொழில்வரி விதித்தல் மற்றும் வசூல் சட்டத்தை திருத்தம் செய்து புதியதாக தொழில்வரி விதிப்பது மற்றும் வசூல் செய்வது தொடர்பாக மாநகராட்சிகளின் சட்டம் 169B பிரிவு 13(2) உட்பிரிவின்படி புதியதாக தொழில்வரி விதிகள் 1999 என வெளியிட்டு தமிழ்நாடு அரசிதழ் பிரத்யோகம் எண் 758, நாள். 28.12.98–ல் பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி தொழில்வரி விதித்தல் தொடர்பான சட்டம் 16–ன்படி ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் கட்டண விகிதம் திருத்தி அமைக்கப்பட வேண்டும். அதன்படி 01.10.2018 முதல் கீழ்க்கண்டவாறு தொழில்வரி திருத்தி அமைக்கப்பட்டு 24.05.2018 ஆம் தேதிய 43 ஆவது எண்ணிட்ட மாநகராட்சி தீர்மானத்தில் ஒப்புதல் பெற்று மாநகராட்சிக்குட்பட்ட எல்லைக்குள் செயல்பட்டு வரும் வணிக நிறுவனங்கள் மற்றும் அதில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | சராசரி அரையாண்டு வருமானம் | அரையாண்டு தொழில் வரி ரூ. |
|---|---|---|
| 1. | %. 21000 வரை | - |
| 2. | %. 21001 முதல் 30000 வரை | 148 |
| 3. | %. 30001 முதல் 45000 வரை | 368 |
| 4. | %. 45001 முதல் 60000 வரை | 734 |
| 5. | %. 60001 முதல் 75000 வரை | 1100 |
| 6. | %. 75001 முதல் அதற்கு மேல் உள்ளது | 1250 |

## சொத்துவரி

## வரிவிகிதம்

ஈரோடு மாநகராட்சிக்கு பிரதான வருவாயாக இருப்பது சொத்து வரி ஆகும். மாநகராட்சியில் மொத்தம் 142631 வரிவிதிப்புகள் உள்ளன. மேலும் 2073 தெருக்கள் அமைந்தள்ளது. தெருக்கள் A B C D என நான்கு மண்டலங்களாக வகைப்பாடு செய்யப்பட்டு மண்டல மதிப்பு அடிப்படையில் வரிவிதிப்பு செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண். | வரையறுக்கப்பட்ட மண்டலங்கள் | 01.04.2022 முதல் நிர்ணயம் செய்யப்படும் மண்டல மதிப்பு (ரூபாய்) |
|---|---|---|
| 1. | A | 2.70 |
| 2. | B | 2.20 |
| 3. | C | 1.70 |
| 4. | D | 1.20 |

## கட்டிடங்கள்

| | | |
|---|---|---|
| அறிக்கையாண்டு வரை வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை | : | 146884 |
| நகரின் நடப்பு அறிக்கையாண்டில் வரிவிதிக்கப்பட்டுள்ள புதிய கட்டிடங்களின் எண்ணிக்கை | : | 4253 |
| ஒரு கட்டிடத்திற்கு சராசரி வரிவிதிப்பு தொகை | : | ரூ. 3932 |

**சொத்துவரி:**

**குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building):**

| பரப்பளவு (ச.அடி) | மண்டலம் –1 | மண்டலம் –2 | மண்டலம் –3 | மண்டலம் –4 |
|---|---|---|---|---|
| <=600 | 17248 | 17356 | 24043 | 16851 |
| 601-1200 | 6165 | 9461 | 9211 | 9600 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1201-1800 | 1577 | 2705 | 2958 | 2893 |
| >1800 | 929 | 1834 | 1776 | 1975 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building):**

| வகைப்பாடு | மண்டலம் –1 | மண்டலம் –2 | மண்டலம் –3 | மண்டலம் –4 |
|---|---|---|---|---|
| தொழிற்சாலைகள் | 1230 | 800 | 341 | 412 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 1923 | 8339 | 3519 | 2684 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 60 | 93 | 113 | 92 |
| அரசு கட்டிடங்கள் | 73 | 45 | 101 | 149 |

**பெயர் மாற்றக் கட்டணம்**

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சொத்து வரி பெயர் மாற்றத்திற்கு கட்டணம் **0.01** % என மன்ற தீர்மான எண். **662** நாள்.**27.11.2024** ன்படி அனுமதி வழங்கப்பட்டு தொகை ரூ. 45,30,833/- வசூல் செய்யப்பட்டு வருகிறது.

## காலி நிலங்கள்

மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள காலியிடங்களுக்கு வரிவிதிப்பு செய்வது சம்பந்தமாக புதிதாக விதிகள் அரசிதழ் எண். 205, நாள்: 06.08.2009 மற்றும் அரசாணை எண். 151, நாள். 20.08.2009-ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி இம்மாமன்றம் தனது 30.09.2009-ம் தேதிய 1642-வது தீர்மானத்தின்படி கீழ்க்கண்டவாறு 01.10.2009 முதல் காலியிட வரி விதிக்கப்பட்டது. இம்மாநகராட்சியில் உள்ள காலியிடத்திற்கு இம்மாநகராட்சியால் விதிக்கப்பட்டுள்ள வரியின் விகிதமும் அதன் விபரமும்

**காலிமனை வரி :**

| வரையறுக்கப்பட்ட மண்டலங்கள் | ஏற்கனவே உள்ள பழைய ஈரோடு நகராட்சி வார்டு பகுதிகளுக்கு | மாநகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்ட மூன்றாம் நிலை நகராட்சி, பேரூராட்சி மற்றும் அனைத்து உள்ளாட்சி பகுதிகளுக்கும் |
|---|---|---|
| | **01.04.2022** முதல் நிர்ணயிக்கப்பட்ட மண்டல மதிப்பு (ரூபாய்) | **01.04.2022** முதல் நிர்ணயிக்கப்பட்ட மண்டல மதிப்பு (ரூபாய்) |
| A | **1.20** | **0.80** |
| B | **1.00** | **0.60** |
| C | **0.80** | **0.40** |

| வ.எண். | வரிகள் | கட்டிடங்கள் மீது | காலியிடங்கள் மீது |
|---|---|---|---|

| | | வரிவிகிதம் | வரிவிகிதம் |
|---|---|---|---|
| 1. | பொது வரி | 6% | ½% |
| 2. | தண்ணீர் வரி | 9% | ½% |
| 3. | கழிவு செல்லும் வரி | 2% | 1/8 % |
| 4. | கல்வி வரி | 4% | 3% |
| 5. | விளக்கு வரி | 2% | 1/8 % |
| | **மொத்தம்** | **23%** | **4 ¼%** |

கல்வி வரி நீக்கி மொத்த வரியில் ரூபாய்க்கு 10 பைசா நூலக வரி வசூலிக்கப்படுகிறது.

## வரி வசூல்

இம்மாநகராட்சி அறிக்கையாண்டில் கேட்பு, வசூல், நிலுவை விவரம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)

| வரியினம் | கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| சொத்து வரி | **1792.46** | **8094.44** | **9886.90** | **612.67** | **6958.62** | **7571.29** | **1179.79** | **1135.82** | **2315.61** |
| காலியிட வரி | **1089.18** | **407.60** | **1496.79** | **319.37** | **145.53** | **464.89** | **769.82** | **262.08** | **1031.89** |
| தொழில் வரி | **1167.79** | **797.33** | **1965.12** | **151.23** | **455.36** | **606.60** | **1016.56** | **341.96** | **1358.52** |
| குடிநீர் கட்டணம் | **151.91** | **732.39** | **884.30** | **54.28** | **638.99** | **693.27** | **97.63** | **93.40** | **191.03** |
| வரியில்லா இனம் | **990.35** | **1277.15** | **2267.50** | **195.77** | **967.58** | **1163.35** | **794.58** | **309.57** | **1104.15** |
| திடக் கழிவு மேலாண் மை கட்டணம் | **134.17** | **683.97** | **818.14** | **45.01** | **591.07** | **636.07** | **89.16** | **92.90** | **182.07** |
| பாதாள சாக்கடை கட்டணம் | **1346.47** | **597.02** | **1943.49** | **83.02** | **90.89** | **173.90** | **1263.45** | **506.14** | **1769.58** |
| மொத்தம் | **6672.33** | **12589.90** | **19262.23** | **1461.35** | **9848.03** | **11309.38** | **5210.98** | **2741.86** | **7952.85** |

2025-2026-ம் ஆண்டு நடப்பு மொத்த கேட்பு ரூ.16200.46 இலட்சத்தில் ரூ.10350.06 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

## பொதுமக்கள் குறைதீர்ப்பு விபரம்

| வ. எண் | மனுக்கள் விபரம் | வரப்பெற்றது | பதில் அளிக்கப்பட்டவை | நிலுவை |
|---|---|---|---|---|
| 1 | மாண்புமிகு முதல்வரின் முகவரி துறையின் கீழ் வரும் மனுக்கள் | 944 | 944 | - |
| 2 | மாவட்ட ஆட்சித் தலைவரின் மக்கள் குறைதீர்க்கும் நாள் மனுக்கள் | 326 | 326 | - |
| 3 | இந்திய அரசு குறைதீர்க்கும் மனுக்கள் | 7 | 7 | - |
| 4 | தகவல் அறியம் உரிமைச் சட்ட மனுக்கள் | 202 | 202 | - |
| 5 | தகவல் அறியம் உரிமைச் சட்டம் மேல்முறையீட்டு மனுக்கள் | 74 | 74 | - |
| 6 | இணையதள மனுக்கள் | 1687 | 531 | 1156 |

வரப்பெற்ற மனுக்கள் உரிய காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொண்டு மனுதாராருக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது.

## கணக்கு பிரிவு

## நிதிநிலை-2025-2026

--------------------------------

**பொது**

----------

அறிக்கையாண்டில் சாதாரண எல்லாக் கணக்குகளிலும்

துவக்கக் கையிருப்பு (ரூ. லட்சத்தில்) ரூ. 3479.78

கணக்கில் வரவு செலவு முறையே வரவு ரூ. 34592.45

செலவு ரூ. 20581.06

ஆண்டு முடிவில் எல்லாக் கணக்கிலும் முடிவிருப்பு ரூ. 17491.17

**செலவு விபரம்**

--------------------

ஆண்டு செலவு விவரம் சாதாரண எல்லா கணக்குகளிலும் ரூ. 20581.06 இலட்சம் ஆகும்.

**கடன்**
**-------**

அறிக்கையாண்டில் துவக்கத்தில் கடன் தொகை ரூ.7876.09 இலட்சம் இவற்றில் அசலுக்காக 637.02 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய கடன் தொகையினை திருப்பி செலுத்த போதிய நிதியினை வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கி தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மாநகராட்சியின் மொத்த கடன் விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆண்டு துவக்கத்தில் இருந்த கடன(ரூ. லட்சத்தில்) | - | ரூ. 7876.09 |
| 2 | ஆண்டில் வாங்கிய கடன் | - | ரூ. 675.00 |
| 3 | ஆண்டில் திருப்பிய கடன்(அசல்) | - | ரூ. 637.02 |
| 4 | ஆண்டு இறுதியில் உள்ள கடன் | - | ரூ. 7964.73 |

**பாதாள சாக்கடைத்திட்டம்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆண்டு துவக்கத்தில் இருந்த கடன் (ரூ. லட்சத்தில்) | - | ரூ. 6249.38 |
| 2 | ஆண்டில் வாங்கிய கடன் | - | ---- |
| 3 | ஆண்டில் திருப்பிய கடன் வட்டி தொகை | - | ரூ. 524.25 |
| 4 | ஆண்டு இறுதியில் உள்ள கடன் | - | ரூ. 5853.92 |

**முதலீடுகள்**

| நிதி | ஆரம்ப இருப்பு ரூ. கோடியில் | முதலீடு செய்தது ரூ. கோடியில் | முதலீட்டில் திரும்ப பெற்றது ரூ. கோடியில் | முடிவு இருப்பு ரூ. கோடியில் |
|---|---|---|---|---|
| வருவாய் நிதி | 2.97 | 1.35 | 1.04 | 3.28 |
| ஸ்மார்ட் சிட்டி | 38.39 | 131.11 | 133.35 | 36.15 |

**தணிக்கை**
**--------------**

அறிக்கையாண்டின் முடிவில் 1330 தணிக்கைத்தடை பத்திகள் நிலுவையில் இருந்தன. அறிக்கையாண்டில் கணக்குகள் நிர்வகிக்கும் தன்மையில் பொதுவாக திருப்திகரம் என்று தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| ஆரம்ப இருப்பு | இந்த ஆண்டு வரப்பெற்றது | மொத்தம் | நீக்கம் செய்யப்பட்டது | நிலுவை |
|---|---|---|---|---|
| 1805 | 142 | 1947 | 617 | 1330 |

**இருப்பும், பொறுப்பும்**

--------------------------

ஆண்டு இறுதியில் பட்டியலுக்கு தொகை கொடுக்கப்படாமல் நிலுவை எதுவுமில்லை.

**வழக்குகள்**

--------------

அறிக்கையாண்டில் உள்ள வழக்குகள் மன்ற அனுமதியுடன் நடத்தப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆண்டுத் துவக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் | - | 36 |
| 2 | அறிக்கையாண்டில் தாக்கல் செய்யப்பட்டவை | - | 06 |
| 3 | (அ) மாநகராட்சிக்கு எதிராக | - | 24 |
| | (ஆ) மாநகராட்சியால் | - | 18 |
| | மொத்தம் | - | 42 |
| 4 | அறிக்கையாண்டில் முடிவு செய்யப்பட்டவை | - | 07 |
| 5 | ஆண்டு முடிவில் நிலுவையில் இருந்தவை | - | 35 |

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம்:**

ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட பள்ளிகளில் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. 5 முதல் 9 வயது வரை உணவு உண்ணும் மாணவர்கள் உள்ள சத்துணவு மையங்கள் 13. இதில் துவக்கப்பள்ளிகள் 8, நடுநிலைப்பள்ளிகள் 4-ல் உள்ள துவக்கப்பள்ளி மாணவர்களும் அடங்குவார்கள். 10 வயது முதல் 14 வயது வரை உள்ள சத்துணவு மையங்கள் 3. இதில் மேல்நிலைப்பள்ளிகள் 3, உயர்நிலைப் பள்ளி 1 மற்றும் நடுநிலைப்பள்ளிகள் 4ல் உள்ள 6ம் வகுப்பு முதல் 8 வகுப்பு வரை உணவு உண்ணும் மாணவர்களும் அடங்குவார்கள்.

இம்மையங்களுக்கு தினம் ஒன்றுக்கு, 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை உணவு உண்ணும் மாணவர்கள் 1209, 6-ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை உணவு உண்ணும் மாணவர்கள் 1012, 9 மற்றும் 10ம் வகுப்பில் உணவு உண்ணும் மாணவர்கள் 296 ஆக மொத்தம் 2517 குழந்தைகளுக்கு சத்துணவு வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

இத்திட்டத்திற்கு ஒவ்வொரு காலாண்டுக்கும் பராமரிப்பு செலவிற்காக காலாண்டு மானியங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களால் அனுமதிக்கப்பட்டு வருகின்றது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த சத்துணவு மையங்கள் 1.4.2007 முதல் இயக்குநர் சமூக நலத்துறை, சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31971/07 ச.உ.தி(யூ) 2, நாள் 10.7.07-ன் உத்திரவு படி இயக்குநர், சமூக நலத்துறை, சென்னை அவர்களின் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டது.

**துவக்கப் பள்ளிகள்**

1. பெரியமாரியம்மன் கோயில் துவக்கப்பள்ளி
2. விநாயகர் கோயில் வீதி துவக்கப்பள்ளி
3. சத்திவீதி துவக்கப்பள்ளி
4. கோட்டை காமராஜ் வீதி துவக்கப்பள்ளி
5. வளையக்கார வீதி துவக்கப்பள்ளி
6. கச்சேரி வீதி துவக்கப்பள்ளி
7. இரயில்வே காலனி துவக்கப்பள்ளி-1
8. பாலசுப்பராயலு வீதி துவக்கப்பள்ளி

**நடுநிலைப்பள்ளிகள்**

1. காவேரி வீதி நடுநிலைப்பள்ளி
2. திருநகர் காலனி நடுநிலைப்பள்ளி
3. எஸ்.கே.சி. ரோடு நடுநிலைப்பள்ளி
4. இரயில்வே காலனி நடுநிலைப்பள்ளி-2

**உயர்நிலைப்பள்ளி**

1. இடையன்காட்டு வலசு உயர்நிலைப்பள்ளி

**மேல்நிலைப் பள்ளிகள்**

1. காமராஜ் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி
2. இரயில்வே காலனி மேல்நிலைப்பள்ளி
3. பெண்கள் மேல்நிலைப்பள்ளி, காவேரி ரோடு

மேற்கண்ட 16 பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு சத்துணவு அமைப்பாளர், ஒரு சமையலர், ஒரு உதவியாளர் என 3 நபர்கள் பணியாற்ற வேண்டும். சத்துணவு அமைப்பாளர்-7, சமையலர்-3, உதவியாளர்-12 என 22 பணியிடங்கள் காலியாக உள்ளது. இப்பணியிடங்களை நிரப்பக்கோரி மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்களுக்கும் இயக்குனர், சமூகநலத்துறை, சென்னை-5 அவர்களுக்கும் கடிதம் எழுதப்பட்டு உள்ளது.

அறிக்கையாண்டில் சத்துணவுத் திட்டத்தின் கீழ் அரசு மூலம் கிடைக்கும் மானியம் மாவட்ட கருவூலத்திற்கு வழங்கப்படுகிறது. இதில் சத்துணவுக் கூடங்களில் வழங்கப்படும் காய்கறி, எரிவாயு, மளிகை சாமான்களுக்கு மானியம் ஆகும். சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஊதியம் சத்துணவு மையச் சமையலர் மற்றும் உதவியாளர்கட்கு ஊதியம் மாவட்ட கருவூலம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**பொது**

அறிக்கையாண்டில் சாலை மற்றும் சாக்கடை பராமரிப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியின் அனைத்து பூங்காக்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது. கட்டண கழிப்பிடங்கள் மற்றும் இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடங்களின் உரிமங்கள் முறையாக புதுப்பிக்கப்பட்டு மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டப்பட்டு வருகிறது. மத்திய பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிலுள்ள குடிநீர் இனங்கள் R.O. பிளான்ட் பொருத்தப்பட்டும் குளிரூட்டப்பட்டும் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மத்திய பேருந்து நிலையம் எப்பொழுதும் பொதுமக்கள் வந்து செல்லுமிடமாதலால் சிறப்பான முறையில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மத்திய பேருந்து நிலையம் மற்றும் நகரின் அனைத்து பகுதிகளும் சுற்றுப்புறம் சுகாதாரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி மகப்பேரில்லங்கள் மூலம் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சிறப்பான முறையில் மருத்துவ வசதிகள் செய்யப்பட்டுள்ளது. ஆணையாளர், மாநகரப் பொறியாளர், நகர்நல அலுவலர், மண்டல உதவி ஆணையாளர்கள், வருவாய் அலுவலர், கணக்கு அலுவலர் மற்றும் இதர பிரிவு உள் மற்றும் வெளிப்புறப் பணியாளர்கள் அனைவரும் மாநகராட்சிக்கு பூரண ஒத்துழைப்பு நல்கி ஒற்றுமையுடனும் சிறப்பாகவும் பணியாற்றியதால் மாநகராட்சி நிர்வாகம் சீராகவும் சிறப்பாகவும் இயங்க வாய்ப்பாக அமைந்தது.

**விருதுகள்**

ஈரோடு மாநகராட்சியில் 2024-2025-ம் ஆண்டிற்கான விருதுகள் ஏதும் பெறப்படவில்லை.

ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி.

# ஈரோடு மாநகராட்சி

## நிர்வாக அறிக்கை

## 2024-2025